1981 மே 13]

கூவத்தூர் ஆதிதிராவிட மாணவர் விடுதி கட்டும் திட்டம்.

*வினா எண். 1093—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி கூவத்தூர் ஆதி திராவிட மாணவர் விடுதி கட்டும் வேலை எந்த நிலையில் உள்ளது?

(ஆ) கட்டடம் எப்பொழுது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மதுராந்தகம் தொகுதி கூவத்தூர் ஆதி திராவிட மாணவர் விடுதி கட்டும் வேலை ரூபாய் 3.80 லட்சத்தில் மதிப்பீடு தயார் செய்து ஏஜென்சியும் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டது.

(ஆ) இவ்வருடம் செப்டம்பர் மாதத்திற்குள் முடிவடைந்துவிடும் என திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழக நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூவத்தூர் ஆதிதிராவிட மாணவர்கள் விடுதிக் கட்டட வேலை 1977 ஆம் ஆண்டிலே துவக்கப்பட்டது என்று எனக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தப் பணி இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. கால தாமதத்திற்கு என்ன காரணம்? யார் பொறுப்பு? அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, 1977 அல்ல, 1975 இல் இந்தக் கட்டடம் தொடங்கப்பட்டு அடித்தளம் வரையில் கட்டப்பட்டது. இந்தக் கட்டடம் நிதி நிலைமை காரணமாக 75 இல் நிறுத்தப்பட்டது. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு 1980 இல் ஆணை அங்கீகரிக்கப்பட்டு அதற்காக ரூ. 3.80 லட்சத்தில் ஒதுக்கி அதற்கான முயற்சியை அரசு மேற்கொண்டிருக்கிறது.

கீழ்பாகம் கிராமம் வடிவேல்நகர் ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்குதல்.

*வினா எண். 1094—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் தொகுதி ஆண்டாங்கோவில் கீழ்பாகம் கிராமம் வடிவேல் நகர் ஆதிதிராவிடர்கட்கு வீட்டுமனைப்பட்டாவிற்கு நிலத்தைக் கையகப்படுத்தும் முறை நிறுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் காரணம் என்ன?